## **Sub Court, Eraniel**

O.S. No.11/2024
Date: 28.01.2026

ம.சா.1 - திருமதி.ஜெனிலா

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

<u>குறுக்கு விசாரணைத் தொடர்ச்சி</u>

நானும் 2ம் வாதி மற்றும் பிரதிவாதிகள் தம்மில் செய்து கொண்ட வாக்கால் பாகபிரிவினையின் அடிப்படையில், அவரவர்கள் பாகத்தை தனித்தனியாக அனுபவித்து வருகிறோம் என்றால், வாக்கால் பாகப்பிரிவினையே நடக்கவில்லை. வாக்கால் பாகப்பிரிவினையின் படி, வழக்கின் 2 மற்றும் 4 ம் பிரதிவாதிகள் குளச்சல் சார்பதிவாளர் அலுவலகத்தில் 3ம் பிரதிவாதிக்கு 1800/2009ன் படி கிரயம் எழுதிக் கொடுத்து இருக்கிறார்கள் என்றால், அது விபரம் எனக்குத் தெரியாது. 3ம் பிரதிவாதி 2 மற்றும் 4 பிரதிவாதியிடம் இருந்து கிரயம் பெற்ற இடத்தையும், தனது பாகத்தையும் சேர்த்து, ரீ சர்வே எண்.461/16 ல் மட்டுபாவு வீடு கட்டி 3ம் பிரதிவாதி குடும்பத்துடன் வசித்து வருகிறார் என்றால், அது பற்றி எனக்கு 2024 ல் தான் என் தம்பி 2ம் வாதி சுரேஷ் சொல்லி அந்த வீடு கட்டியது பற்றி எனக்கு தெரியும். 3ம் பிரதிவாதியின் வீடு உள்ளது வழக்கு A பட்டிகை வஸ்து என்றால், அது விபரம் எனக்கு தெரியாது. அந்த வீடு கல்லூக்கூட்டம் பேரூராட்சிக்கு உட்பட்டு கதவு எண்.4/64டி தற்போது 4/64டி2 என்றால், அது விபரம் எனக்குத் தெரியாது. அந்த வீட்டிற்கு மதிப்பு சுமார் ரூ.15,00,000/−க்கு மேல் இருக்கும் என்றால், அது விபரம் எனக்குத் தெரியாது. அந்த வீடு கட்டி 14 வருடங்களுக்கு மேல் இருக்கும் என்றால், சரியல்ல. 3ம் பிரதிவாதி அவ்வாறு வீடு கட்டும் போது, எனக்கு அது தெரியும் என்றாலும், வாக்கால் பாகத்தின் அடிப்படையில் நாங்கள் தனித்தனியாக சொத்துக்களை அனுபவித்து வருவதால், அந்த வீட்டை கட்டும் போது அதனை தடுக்கவோ, வேறு நடவடிக்கையோ நாங்கள் எடுக்கவில்லை என்றால், சரியல்ல. 2 மற்றும் 4 பிரதிவாதிகளிடமிருந்து கிரயம் பெற்று 3ம் பிரதிவாதிக்கு முழுமையான உரிமை உள்ளது என்றால், சரியல்ல. A பட்டிகை சர்வே எண்ணில் உள்ள, 3ம் பிரதிவாதியின் வீட்டின் மதிப்பை குறிப்பிடவில்லை என்பதால், வழக்குரை மதிப்பு மற்றும் சந்தை மதிப்பு முறையாக குறிப்பிடவில்லை என்றால், சரியல்ல. 1 முதுல் 4பிரதிவாதிகள் வழக்கு 4 பட்டிகை சொத்துகளில் எதிரிடை அனுபவம் பெற்று உள்ளார்கள் என்றால், சரியல்ல. 3ம் பிரதிவாதி கிரயம் பெற்ற மற்றும் அவருடைய பாக சொத்தில்

பட்டா மாற்றம் செய்து அனுபவித்து வருகிறார் என்றால், அது விபரம் எனக்குத் தெரியாது. 1ம் பிரதிவாதிக்கு உரிமை பட்ட அவகாசத்தை, 3ம் பிரதிவாதி 12.09.2011 அன்று குளச்சல் சார்பதிவாளர் அலுவலகத்தில் கிரய ஆவணம் எண்.2260/2011ன் படி கிரயம் பெற்று அனுபவித்து வந்தார் என்றால், அது விபரம் எனக்குத் தெரியாது. பிறகு 08.08.2016ல் 1ம் பிரதிவாதியின் மனைவி அனிதா ராணிக்கு 3ம் பிரதிவாதி கிரயம் கொடுத்தார் என்றால், அது விபரம் எனக்குத் தெரியாது. எனக்கும் 2ம் வாதிக்கும் ஒதுக்கப்பட்ட உரிய பாகங்கள் வழக்கு பட்டிகை வஸ்துகளின், தெற்கு பக்கம் தனிக்கண்டமாக உள்ளது என்றால், அது விபரம் எனக்குத் தெரியாது. 2002ல் இருந்தே நான் அங்கு போகவில்லை. 3ம் பிரதிவாதி வீடு கட்டிய போதே எனக்கு விபரங்கள் தெரியும் என்றாலும், பாகப்பிரிவினை செய்ததன் காரணமாக நான் தடுக்கவில்லை என்றாலும், தற்போது எனது சித்தி விக்டோரியாவின் தூண்டுதலின் பேரில், 3ம் பிரதிவாதி மற்றும் மற்ற பிரதிகளை கஷ்டபடுத்த வேண்டும் என்ற உள்நோக்கத்துடன் இந்த வழக்கு செய்கிறேன் என்றால், சரியல்ல. 26.12.2023ல் நான் பாகப்பிரிவினை செய்ய 3ம் பிரதி வாதியிடம் கேட்டதாக, வழக்கு மூலம் ஏற்படுத்துவதற்காக உண்மைக்கு புறம்பாக குறிப்பிடுகிறேன் என்றால், சரியல்ல. ஏற்கனவே பாகப்பிரிவினை செய்து தனித்தனியாக அனுபவித்து வருவதால் மீண்டும் பாகப்பிரிவினை கேட்க தேவையில்லை என்றால், சரியல்ல. ஏற்கனவே வாக்கால் பாகப்பிரிவினை செய்யப்பட்டு சொத்துக்களை தனியாக அனுபவித்து விபரங்களை மறைத்து தவறுதலாக விபரங்களை நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.